# IN THE COURT OF III ADHOC JUDGE

## City Civil Court Chennai -104

**PW1: N.G. Ramanathan OS. NO:6281/2015 DATE:08.06.2026**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சாட்சியானவர் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக செய்யப்படுகிறார்.

நான் பிரமாண வாக்குமூலத்தில் 5-வது பத்தியில் Indoasian finance ltd., என்ற கம்பெனியில் TN31B6559 என்ற பேருந்து வாங்க முழு பணமும் கொடுத்ததாக கூறியுள்ளேன். இதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. இந்த பேருந்து வாங்குவதற்கு 8 லட்ச ரூபாய் கடன் நிலுவையில் இருந்ததாக கூறியுள்ளேன். இதற்கும் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் பங்குதாரர் நிறுவனத்திற்கு இடையில் Arbitration வழக்கு இருந்தது என்றால் மல்லிகாவிற்கும் கலியபெருமாளிற்கும் இடையில் தான் Arbitration வழக்கு நடந்தது. Arbitration வழக்கில் என்னுடைய மனைவி ஆஜராகவில்லை மற்றும் பதிலும் தாக்கல் செய்யவில்லை. Arbitration வழக்கில் என்னுடைய மனைவியும் பணம் கட்ட வேண்டும் என்று உத்திரவு ஆகி வாங்கியது என்றால் சரிதான். Arbitration வழக்கில் என் மனைவியும் 9 லட்சத்தி 92 ஆயிரத்து 152 ரூபாய் வட்டியுடன் செலுத்த வேண்டுமென்று உத்திரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த உத்தரவு Ex.B5 இதை எதிர்த்து என்னுடைய மனைவி உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை. நான் பிரமாண வாக்குமூலத்தில் முதல் பிரதிவாதியின் 1/3 பாகத்தை கொடுத்துவிட்டால் சமரசமாக முடித்துக் கொள்வதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் இதே பத்தியில் இவ்வாறு கூறியதால் முதல் பிரதிவாதி கோபமடைந்து

மௌனமாக இருந்துவிட்டார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த விவரங்களை நான் பிராதில் கூறவில்லை என்றால் எனக்கு நியாபகம் இல்லை. நான் இதே பத்தியில் 30.11.1998 வரை 1-ம் பிரதிவாதிக்கு கொடுக்க வேண்டிய கணக்கை கொடுத்துவிட்டேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். 30.11.1998 வரை 1-ம் பிரதிவாதிக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுத்தாயிற்று என்பதற்கு நீதிமன்றத்தில் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 16.08.1998 முதல் 07.08.1999 வரை 1-ம் பிரதிவாதி பேருந்தை இயக்கி கொண்டிருந்தார் என்பதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அந்த காலக்கட்டத்தில் 1-ம் பிரதிவாதிக்கு பேருந்தை இயக்கியதால் 6000 ரூபாய் வருமானம் வந்தது என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 30.11.1998 வரை கணக்குகளை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

(வாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டி கேட்டுக்கொண்டதற்க்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக இச்சாட்சியின் சாட்சியம் இத்துடன் நிறுத்தி ஒத்திவைக்கப்படுகிறது.)